# National Seminar on Recent Advances in Physics (NSRAP) – 2016

**09-09-2016**

## <u>Dinakaran</u>

# சங்கரா பல்கலையில் இயற்பியல் கருத்தரங்கம்



காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகம், தென்னிந்திய இயற்பியல் சங்கம் இணைந்து தேசிய கருத்தரங்கம் நடத்தியது. பல்கலைக்கழக பதிவாளர் சீனிவாசு குத்துவிளக் கேற்றி தொடங்கி வைத்தார். உடன், அண்ணா பல்கலைக்கழக படிம வளர்ச்சி மைய இயக்குனர் நாராயண கல்குரா, திருப்பதி வெங்கடேஷ்வரா பல்கலைக்கழக பேராசிரியர் உத்தணா, துறை தலைவர் வெங்கட்ரமணன் உள்ளனர்.

---

**காஞ்சிபுரம், செப்.11:** காஞ்சிபுரம் சங்கரா பல்கலைகழகம், தென்னிந்திய இயற்பியல் சங்கம் இணைந்து இயற்பியல் துறையில் சமீபத்திய முன்னேற்றம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பல்கலைக்கழக பதிவாளர் சீனிவாசு தலைமை தாங்கி கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இயற்பியல் துறை தலைவர் வெங்கட்ரமணன் வரவேற்று பேசினார். இயற்பியல் துறை சங்க துணை தலைவர் ஆனந்தவர்மா முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் படிம வளர்ச்சி மைய இயக்குநர் நாராயணகல்குரே, திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழக பேராசிரியர் உத்தண்ணா ஆகியோர் கலந்து கொண்டு இயற்பியல் துறையில் முன்னேறங்கள், நானோ தொழில் நுட்பம், சோலார் செல் பயன்பாடுகள் பற்றி விரிவாக விளக்கி பேசினார்கள்.

இதில் அறிவியல் துறை தலைவர் பாலாஜி, பேராசிரியர் வெங்கடகிருஷ்ணன், ஒருங்கிணைப்பாளர் சுந்தரராஜன் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# National Seminar on Recent Advances in Physics (NSRAP) – 2016

**09-09-2016**

## <u>The Hindu - Tamil</u>




▲ ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மகா வித்யாலயா பல்கலைக்கழகத்தில் இயற்பியலின் சமீபத்திய முன்னேற்றம் என் தலைப்பில் தேசிய இயற்பியல் கருத்தரங்கம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நானோ தொழில்நுட்பம், சோலார் செ மற்றும் பயன்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. 200-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன. பல்கலை கழக பதிவாளர் ஸ்ரீநிவாசு குத்துவிளக்கு ஏற்றி கருத்தரங்கை தொடங்கிவைத்தார்.

## National Seminar on Recent Advances in Physics (NSRAP) – 2016

**09-09-2016**

## <u>Eenadu</u>

# చంద్రశేఖరేంద్రలో భౌతిక శాస్త్రంపై జాతీయ సదస్సు

**కాంచీపురం, న్యూస్‌టుడే:** కాంచీపురం సమీపంలోని ఏణాత్తూరులో ఉన్న పరమాచార్య శ్రీ చంద్రశేఖరేంద్ర సరస్వతి విశ్వ మహా విద్యాలయంలో శనివారం విశ్వ విద్యాలయ భౌతిక శాస్త్ర శాఖ, దక్షిణ భారత భౌతిక శాస్త్ర అధ్యాపకుల సంఘం సంయుక్త ఆధ్వర్యంలో 'భౌతిక శాస్త్రంలో ప్రస్తుత అభివృద్ధి' అనే అంశంపై జాతీయ సదస్సు జరిగింది. విశ్వ మహా విద్యాలయ రిజిస్ట్రారు జి.శ్రీనివాసు జ్యోతి ప్రజ్వలన చేసి సదస్సును ప్రారంభించారు. ముఖ్య అతిధులుగా పాల్గొన్న చెన్నై అన్నా విశ్వ విద్యాలయ క్రిస్టల్ గ్రోత్ సెంటరు డైరెక్టరు ఆచార్యులు నారాయణ కుల్‌కరా, తిరుపతి శ్రీవెంకటేశ్వర విశ్వ విద్యాలయ ఆచార్యులు ఉద్దన్న, చంద్రశేఖరేంద్ర సరస్వతి విశ్వ విద్యాలయ ఆచార్యులు వెంకటకృష్ణన్ తదితరులు నానోటెక్నాలజీ, సోలార్ సెల్ గురించి వివరించారు. పలు రాష్ట్రాల నుంచి సుమారు 200 మంది విద్యార్థులు పాల్గొన్న ఈ కార్యక్రమానికి భౌతిక శాస్త్రం విభాగ డీన్ కె.వెంకట్రామన్ స్వాగతం పలకగా.. భౌతిక శాస్త్రం అధ్యాపకుల సంఘం కార్యనిర్వాహక కార్యదర్శి ఆచార్య సుందరరాజన్ కృతజ్ఞతలు తెలిపారు.




జ్యోతి ప్రజ్వలన చేస్తున్న రిజిస్ట్రారు శ్రీనివాసు